முழுப் பதிப்புரிமையுடையது

aat SRI LANKA

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## ஆரம்பப் பரீட்சை – 2011 ஜூலை

## (53) வணிகக் கல்வி
(Business Studies)

17-07-2011
பிற்பகல்
[2.00 – 4.00]

**நேரம்: மூன்று (02) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 06
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

*(1) இவ்வினாத்தாள் **A, B, எனும் இரண்டு (02)** பகுதிகளைக் கொண்டது.*

*(2) **கீழே குறிப்பிட்டவாறு ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.***
- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்***
- ***பகுதி B யிலிருந்து ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கும்***

*(3) **விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே மொழி மூலம் ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

*(4) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி - A

பல்'தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.
40 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **மிகவும் சரியான விடையைத்** தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் பதில்களிலிருந்து தெரிவுசெய்து உமது விடைப் புத்தகத்தில் வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) வர்த்தகம் தொடர்பான துணைச்சேவை **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?

(1) பணமும் வங்கியியலும் (2) போக்குவரத்து
(3) களஞ்சியப்படுத்தல் (4) இடர் முகாமைத்துவம்

(B) போலிப் பங்காளர் (Quasi partner) சம்பந்தமான சரியான கூற்று:

(1) வரையறுக்கப்படாத பொறுப்பு
(2) வழக்கமாக ஒரு சம்பளத்தைப் பெறுவார்
(3) அவர் ஒரு பங்காளர் என்பது பொதுமக்களுக்குத் தெரியாது
(4) முகாமைத்துவப் பணிகளில் பங்குபற்றுவார்

(C) வரையறுக்கப்பட்ட பொறுப்பு என்பதன் கருத்து:

(1) கம்பனிக் கடன்களுக்காக எல்லாப் பங்குடைமையாளருக்கும் சமமான பொறுப்பு உள்ளது
(2) கம்பனி ஒன்று அடையக்கூடிய கடன்தொகைக்கு ஒரு வரையறை இருக்கிறது
(3) புங்குடைமையாளர்கள் தனிப்பட்ட முறையில் கடன்களுக்கான பொறுப்பு இல்லாதவர்கள்
(4) அமைப்பு அக விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு வரை மட்டுமே பங்குடைமையாளர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

(D) குறித்துக்காட்டப்பட்டு இல்லாதவிடத்து, காசோலை ஒன்றின் செல்லுபடியாகும் காலம்:

(1) 30 நாட்கள் (2) 3 மாதங்கள் (3) 4 மாதங்கள் (4) 6 மாதங்கள்

(E) உண்டியலொன்று அதன் முகப்பில் பின்கூறப்படும் யாருடைய ஒப்பம் இடப்படுகிறபோது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் ?

(1) வரையுநர்
(2) மாற்றம் பெறுபவர் (The drawee)
(3) பெறுவோன்
(4) வரையுநர் மாற்றம் பெறுபவர் இருவரினதும்

(F) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஒரு நோக்கம் (an objective) **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?

(1) சுதந்திர வர்த்தக வலயங்களை நிறுவி அபிவிருத்தி செய்தல்
(2) சிறியளவு, மத்திய அளவு தாளாண்மைகளை (enterprises) நிறுவுதலும் அபிவிருத்தி செய்தலும்
(3) சுயதொழில்களுக்கான பயிற்சி, தொழில்நுட்ப உதவி போன்ற அவசிய வசதிகளை வழங்குதல்
(4) கைத்தொழில் கிராமங்களை மேம்படுத்தல்

(G) முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் அங்கீகாரம் பெற்ற செயல்திட்டங்களின் கீழ் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு வர்த்தக நடவடிக்கை பின்வருவனவற்றுள் எது?

(1) ஆழ்கடல் மீன்பிடித்தல்
(2) ஆழமற்ற கடலில் மீன்பிடித்தல்
(3) கல்வி
(4) உள்ளூர் மரங்களைப் பயன்படுத்தி தளபாடங்களின் உற்பத்தி

(H) அண்மியக் காரணக் கோட்பாடு (Principle of Proximate Cause) என்பதனாற் கருதப்படுவது:

(1) காப்புறுதி பெறுபவர் (Insured) செலுத்தியிருந்த தவணைக் கட்டணத் தொகைக்கு மேலாகவுள்ள கோரல்களுக்கு (claims) காப்புறுதிக் கம்பனி கொடுப்பனவு செய்யாது
(2) காப்புறுதி பெறுபவர் பதிலாக புதிய பொருட்களைப் பெறுவார்
(3) காப்புறுதி பெறுபவர் பாதிப்புற்ற உண்மை நட்டங்களுக்காக (actual loss) மட்டுமே நட்ட ஈட்டைப் பெற முடியும்
(4) காப்புறுதி செய்யப்பட்ட இடர் ஒன்றினால் (Risk) சேதம் விளைவிக்கப்பட்டபோதே காப்புறுதி பெறுபவர் நட்டஈட்டைப் பெற முடியும்.

(I) காப்புறுதி செய்பவரிடமிருந்து அதே போன்றே வெளிவாரித் தரப்பினரிடமிருந்தும் (outside party) நட்டஈடு கோரப்படுகிற சாத்தியப்பாடானது (Possibility) எக்கோட்பாட்டினால் தடுக்கப்படுகிறது?

(1) பங்களிப்புத் தொகை
(2) கடன் பற்றுரிமை மாற்றியிடல் (subrogation)
(3) நட்ட உத்தரவாதம் (Indemnity)
(4) காப்புறுதி செய்யத்தகு அக்கறை

(J) ஒரு வர்த்தகப் பத்திரம் (a commercial paper) என்பது:

(1) வர்த்தக வங்கி ஒன்றினால் வெளியிடப்பட்ட ஒரு உத்தரவாதப் பத்திரம்
(2) வர்த்தக அமைப்பு ஒன்றினால் (commercial organization) வெளியிடப்பட்ட ஒரு கடன் தாள் (debit note)
(3) மேலாண்மைக் கம்பனிகளால்(superior companies) குறுங்கால நிதிகளைப் பெறுவதற்காக வெளியிடப்பட்ட ஒரு காப்பு ஆவணம்(a security document)
(4) பணம் கடன் பெறுவதற்கு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஒரு ஆவணம்.

(K) பின்வருவனவற்றுள் பணச்சந்தைச் சாதனங்களை மாத்திரம் கொண்டுள்ள குழுமம்:

(1) வுர்த்தகத் தாள்கள் (Commercial Papers), தொகுதிக் கடன்கள், திறைசேரி முறிகள்

(2) திறைசேரி உண்டியல்கள், வர்த்தகத் தாள்கள், வைப்புச் சான்றிதழ்கள்

(3) வாக்குறுதிச் சீட்டுக்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள், சாதாரண பங்குகள்

(4) தொகுதிக் கடன்கள், சாதாரண பங்குகள், திறைசேரி முறிகள்

(L) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் (Colombo Stock Exchange) பணி **அல்லாத** ஒன்று பின்வருவனவறறுள் எது ?

(1) கடன் மற்றும் உரிமை முதல் மூலதனம (debt and equity capital), மாற்றுரிகள் (convertibles), உரிமை ஆணைகளும (warrants) சொத்து பிணையுறுதிப்படுத்தல் களும் (ssset securitizations) ஆகியவற்றை மேம்படுத்த கம்பனிகளைப் பட்டியலிடல்

(2) முறைமையாக்கப்பட்ட பிணைச் சந்தைகளை உறுதி செய்தலும் (ensure formalized security market) தொழில்சார் தரங்களைப் பேணுதலும்

(3) பட்டியலிடப்பட்ட எல்லாக் காப்பாவணங்களினதும் இரண்டாம் நிலை வியாபாரத்திற்கான வியாபார வசதிகளை வழங்குதல்

(4) எல்லா இரண்டாம்நிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான வணிகத் தீர்வைகள் (trade clearings) கணக்குத் தீர்த்தல்கள், பதிவு மற்றும் வைப்பு வசதிகள் (depository facilities) ஆகியவற்றைப் பதிதல்

(M) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் (Colombo Stock Exchange) "பங்குகளின் நேரடி வாங்கலும் விற்றலும்" (பங்குகள் கையாள்கை dealing shares) தொடர்பிலான சரியான கூற்றினைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) தரகர் ஒருவரூடாக பங்குகளை வாங்கலும் விற்றலும்

(2) கம்பனியிடமிருந்து பங்குகளை வாங்கலும் விற்றலும்

(3) தரகரிடமிருந்து பெற்ற கடவுச் சொல் ஒன்றைப் பயன்படுத்தி இணைய வலையமைப்பு ஊடாக பங்குகளை வாங்கலும் விற்றலும்

(4) நேரடியாக இணைய வலையமைப்பு ஊடாக பங்குகளை வாங்கலும் விற்றலும்

(N) தூய்மையற்ற கப்பலேற்று வார்நாமம் என ஒன்று வெளிப்படுத்தப்படுவது:

(1) கப்பலேற்றப்பட்ட பொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டிய வழிமுறைகளிலிருந்து அல்லது எதிர்பார்க்கப்பட்ட தரத்திலிருந்து விலகுமேயானால்,

(2) கப்பலேற்றப்பட்ட பொருட்கள் உரிய நேரத்திற்கு வந்து சேராதபோது

(3) சேதங்கள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக பொருட்களை ஏற்றுக்கொள்ள இறக்குமதியாளர் மறுக்கின்றபோது

(4) பொருட்களுக்கான கொடுப்பனவைச் செலுத்த இறக்குமதியாளர் மறுக்கின்றபோது

(O) இரத்துச் செய்யத்தக்க நாணயக் கடிதத்தில் (revocable letter of credit) உள்ள ஒரு முக்கிய அம்சம் பின்வருவனவற்றுள் எது?

(1) வட்டி இடர் வெளிப்படுத்தப்பட்டுள்ளதன் (interest risk exposed) காரணமாக ஏற்றுமதி யாளர்களால் பொதுவாக இரத்துச் செய்யத்தக்க நாணயக் கடிதம் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை

(2) இரத்துச் செய்யத்தக்க நாணயக் கடிதங்கள் உறுதிப்படுத்தப்படவோ அன்றேல் உறுதிப் படுத்தப்படாமல் விடவோ முடியும்.

(3) ஏற்றுமதியாளரின் அல்லது பயனாளியின் சம்மதமின்றி எந்த நேரத்திலும் நாணயக் கடிதத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் திருத்தங்கள், மாற்றங்கள், இரத்துச் செய்தல் ஆகியவற்றிற்கு இரத்துச் செய்யத்தக்க நாணயக் கடிதம் இடமளிக்கிறது.

(4) இரத்துச் செய்யத்தக்க நாணயக் கடிதம் எந்த நேரத்திலும் கைமாற்றத்தக்கதாகும். (transferable)

(P) "முன்னுரிமை வியாபார ஏற்பாடுகளிலிருந்து சுங்க ஒன்றிணைவு வரைக்கும் உருவான வளர்ச்சியே பொருளாதார ஒன்றிணைப்பு (Economic integration) ஆகும்". சுங்கங்களின் ஒன்றிணைவில் ஒரு இயல்பு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

(1) அங்கத்துவ நாடுகளுக்கிடையே தீர்வை அறவீடு இல்லாமை

(2) குறைக்கப்பட்ட தீர்வை அறவீடு இல்லாத் தடைகள் (Reduced non-tariff barriers)

(3) பொது வெளிவாரி தீர்வைகள் (Common external tariffs)

(4) அங்கத்துவ நாடுகளிடையே மூலதனம் மற்றும் மனிதவலு ஆகியவற்றில் தாராள அசைவு (Free movements)

(Q) ஒப்பீட்டு நன்மைகள் கோட்பாட்டின் (Theory of Comparative Advantages) எடுகோள்களுள் ஒன்று அல்லாதது (not an assumptions) பின்வருவனவற்றுள் எது ?

(1) உற்பத்தியில் அரசாங்கத் தலையீடு இல்லை.

(2) வியாபாரத் தடைகள் உள்ளமை (Availability of trade barriers)

(3) இரண்டு நாடுகளும் இரண்டு வகையான பொருட்களும் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படும்

(4) இரண்டு நாடுகளிலும் வள உரிமைத்துவம் (resource ownership) உறுதியானது அல்லது நிலையானது

(R) உலகமயமாக்கல் தொடர்பாக பிழையானது பின்வருவனவற்றுள் எது?

(1) உலகத்தினூடான பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முறைமைகளின் ஒன்றிணைப்பே உலகமயமாக்கல் ஆகும்.

(2) ஏழைகளின் /வலிமை குறைந்த நாடுகளின் மீது வளர்ச்சியடைந்த நாடுகள் தீர்மானம் எடுத்தலில் எப்போதும் ஆதிக்கம் செலுத்துவதே உலகமயமாக்கல் ஆகும்.

(3) உலக சந்தைகளினதும் வியாபாரங்களினதும் பிணைப்பையும் (connectivity) ஒன்றிலொன்று தங்கியிருத்தலையும் (interdependence) வளர்க்கின்ற செயன்முறையே உலகமயமாக்கல் ஆகும்.

(4) உலகமயமாக்கல் உலக சனத்தொகைக்கு அனுகூலத்தை வழங்கும் சர்வதேச பொருளியல் சார் நலனை ஏற்படுத்தும்.

(S) உலக வர்த்தக நிறுவனத்தின் (World Trade Organization) ஒரு குறிக்கோள் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது ?

(1) சர்வதேச நிதிசார் பிரச்சினைகளின் தீர்த்தலில் உதவுதல்

(2) தாராள வர்த்தகத்தை ஊக்குவித்தல்

(3) வர்த்தக சச்சரவுகளைத் (trade disputes) தீர்தத்ல்.

(4) பல்பக்க வர்த்தகம் மீதான கலந்துரையாடல் மன்றமாக (forum of discussion) செயலாற்றுதல்

(T) அந்நியச் செலாவணி வீதத்தின் மிகை மதிப்பிடல் பற்றிய சிறந்த வரைவிலக்கணத்தை பின்வருவனவற்றுள் எது தருகிறது?

(1) அரசாங்கம், உண்மையான விகிதத்தை விட குறைந்ததொரு மட்டத்தில் உள்ளூர் நாணய அலகின் வெளிவாரிப் பெறுமதியை வைத்திருக்கிறது.

(2) அரசாங்கம், உண்மையான விகிதத்தை விட உயர்ந்ததொரு மட்டத்தில் உள்ளூர் நாணய அலகின் வெளிவாரிப் பெறுமதியை வைத்திருக்கிறது.

(3) நாணயத்தின் கேள்வி நிரம்பல் மீதான அடிப்படையில் அந்நியச் செலாவணி வீதத்தின் ஒரு தொடர்ச்சியான பெறுமதி ஏற்றம்.

(4) மத்திய வங்கியினால் பிரதான வெளி நாணயங்கள் தொடர்பில் உள்ளூர் நாணயத்தின் பெறுமதியில் வேண்டுமென்றே செய்யப்படும் குறைப்பு (delibrate reduction)

(ஒவ்வொன்றும் 02 புள்ளிகள், மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலிருந்து ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
60 புள்ளிகள்

**02.** (a) உள்வாரி வர்த்தகம் (internal trade) மற்றும் வெளிவாரி வர்த்தகம் ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்கி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக. (05 புள்ளிகள்)

(b) மொத்த வியாபாரத்தை சில்லறை வியாபாரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுக. (05 புள்ளிகள்)

(c) பிரித்தெடுக்கும் கைத்தொழில் (extractive industries) களின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) 1890 இன் பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவில் உள்ள கோட்பாட்டு உள்ளடங்கல்கள் (principal contents) ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(b) ஒரு பொறுப்புக்கள் வரையறுத்த கம்பனி (Limited Liability Company)யின் பதிவு செய்தலுக்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை? (05 புள்ளிகள்)

(c) வெகுமதிப் (golden shares) பங்கொன்றை வரைவிலக்கணப்படுத்தி, வெகுமதிப் பங்குகளை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**04.** (a) கைமாற்றத்தக்க நிதிச் சாதனங்களை வரைவிலக்கணப்படுத்தி சந்தையில் கிடைக்கக்கூடியதாக வுள்ள கைமாற்றத்தக்க சாதனங்களின் பிரதான வகைகளின் பெயர்களைக் கூறுக (05 புள்ளிகள்)

(b) மத்திய வைப்புக் களஞ்சிய முறைமை (Central Depositary System) என்றால் என்ன? மத்திய வைப்புக் களஞ்சிய முறைமையில் பங்குபற்றுகிறவர்கள் யார்? (05 புள்ளிகள்)

(c) மெய்நேர மொத்தத் தீர்த்தல்கள் முறைமையினால் (Real Time Gross Settlements) சந்தைப் பங்குபற்றுநர்களுக்கு (market participants) கிட்டுகின்ற நன்மைகளைப் பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** (a) மிலங்கா பங்கு விலைச் சுட்டிக்கும் (Milanka Share Price Index) எல்லாப் பங்கு விலைச் சுட்டிக்கும் (All Share Price Index) இடையேயுள்ள வேறுபாடுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(b) ஏனைய முதலீட்டு மாதிரிகளைவிட சாதாரண பங்குகளை வைத்திருப்பதிலுள்ள பிரதான நன்மைகளைப் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

(c) அரசாங்கப் பிணைகள் வியாபாரத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ள மீள்கொள்வனவு (Repo) மற்றும் பின் மீள்கொள்வனவு (Reverse) ஆகிய வசதிகளைச் சுருக்கமாக விபரிக்குக (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**06.** (a) "சென்மதி நிலுவையின் மூலதனம் மற்றும் நிதிசார் கணக்கியலில் (Capital & Financial Account)" உள்ள உருப்படிகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(b) சென்மதி நிலுவையிலுள்ள மிகை (surplus) மற்றும் பற்றாக்குறை (deficit) ஆகியவற்றை நீங்கள் எவ்வாறு இனங்காண்பீர்கள்? (05 புள்ளிகள்)

(c) வர்த்தக மாற்றுவீதம் (terms of trade) என்பதனாற் கருதப்படுவது யாது? வுர்த்தக மாற்றுவீதத்தில் உள்ள சீர்கேடுகளுக்கான காரணங்கள் மூன்றைத் (03) தருக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**07.** பின்வருவனவற்றைப் பற்றி சிறு குறிப்புகள் எழுதுக.

(a) ஊக்கமற்ற பங்காளர் (Sleeping Partner)

(b) அபிவிருத்தி முறிகள் (Development Bonds)

(c) உரிமை வழங்கல் (Right Issue)

(d) நிதிசார் பெறுமதிகள் (Financial Derivatives)

(e) கழித்து ஒதுக்குதல் (Dumping)

(ஒவ்வொன்றுக்கும் 03 புள்ளிகள் வீதம் மொத்தம் 15 புள்ளிகள்)

- o0o -